2015 ஆகஸ்ட் 25] [பேரவைத் தலைவர்]

உங்களை allow பண்ணுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நான் உங்களை allow பண்ணுகிறேன் என்று சொல்லும்போது, அதற்கு வாய்ப்பு கொடுக்காமல் பிடிவாதமாக, நீங்கள் சொல்வதைத்தான் செய்ய வேண்டுமென்றால் எப்படி? (குறுக்கீடு) இருங்கள், ஒரு அலுவல் முடிந்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) தொடர்ச்சியாக, நன்றி சொல்லி முடிக்கட்டும். நீங்கள் உட்காருங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

4. அம்மா ஆரோக்கியத் திட்டம், முழு உடல் பரிசோதனைத் திட்டம், புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்குதல் உள்ளிட்ட மருத்துவ மேம்பாட்டு நடவடிக்கைகள்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். நன்றி சொல்லக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகிலமே போற்றும் வகையில் ஆன்றோர்கள் எல்லாம் மகிழும் வகையில் அரசியல் வித்தகர்கள்கூட வியக்கும் வகையில் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளின் சூழ்ச்சிகளையெல்லாம் வீழ்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) சதிகளையெல்லாம் தவிடுபொடியாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் மக்கள் தலைவராக அமர்ந்திருக்கிற போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்பதிலே பாராட்டுவதிலே நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியடைகிறோம். இன்றைக்கு போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முத்து முத்தாக 22 நலத் திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களை (மேசையைத் தட்டும் ஒலி) சுகாதாரத்திலே புரட்சியை ஏற்படுத்துகிறவகையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே விதி 110-ன்கீழே எடுத்து வைத்திருக்கிறார்கள். திருமூலர் சொன்னார்,*

'ஊன் வளர்த்தோர் உயிர் வளர்த்தோரே', இந்த வரிகளை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், திருமூலர் சொன்னார், 'ஊன் வளர்த்தோர் உயிர் வளர்த்தோரே', ஊன் வளர்ந்தால்தான் உயிர் வளரும் என்ற அந்த தத்துவத்திற்கிணங்க, தமிழகத்திலே கோடானுகோடி அடித்தளத்து ஏழை, எளிய தொழிலாளர்கள், மத்திய தர மக்களுக்கும் கீழே இருக்கின்ற மக்கள் எல்லாம், தங்கள் உடலை நல்ல முறையில் வளர்ப்பதற்கு, ஊனை வளர்ப்பதற்கு இன்றைக்கு அச்சாணியாக மாண்புமிகு அம்மா அவர்கள் உதவுகிற வகையிலே, அரசு உதவுகிற வகையிலே, "அம்மா ஆரோக்கியத் திட்டம், அம்மா முழு உடல் மருத்துவப் பரிசோதனைத் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா பெண்கள் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம், அம்மா மகப்பேறு சஞ்சீவிதிட்டம்", என 4 அம்மா திட்டங்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றைக்கு அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள்.

முற்பகல் 11–45

நோயற்ற வாழ்வுதான் குறைவற்ற செல்வம் என்பது தமிழகத்தினுடைய தொன்மை மொழி, மூதுரை, பழமொழி. நோய் இல்லாத ஒரு சமூகம், நோய் இல்லாத ஒரு மனிதன் பெரும் செல்வந்தனாகிறான். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு வீட்டின் கதவுகளையும் தட்டி, இன்றைக்கு, "அந்தச் செல்வத்தை நான் வழங்குகிறேன்; (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் செல்வத்தை நான் வழங்குகிறேன்" என்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்தத் திட்டங்களை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். பாதையிலே, வரும் வழியிலே முட்களைத் தூவி விட்டால், பாதை அடைந்துவிடும்; பயணம் நின்றுவிடும் என்று வஞ்சகர்கள் கனவு கண்டார்கள். கனவு கலைவதற்கு முன்பே "நீ வெற்றி என்னும் வார்த்தையை இனி கனவிலேகூட காண முடியாது; (மேசையைத் தட்டும் ஒலி) நீ வழியடைத்து வைத்தால், வான் வழியே வந்து இறங்குகிற ஆற்றல் எனக்கு உண்டு" (மேசையைத் தட்டும் ஒலி) என்று அப்படிப்பட்ட ஆற்றல்மிக்க தலைவராக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு 22 நலத் திட்டங்களை அடுக்கடுக்காகத் தந்திருக்கிறார்கள்.

நான் இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டு நன்றிகூர்ந்து இங்கே பாராட்ட விரும்புகிறேன். என்னுடைய குடியாத்தம் தொகுதியிலே, குடியாத்தம் அருகிலுள்ள கிராமங்கள் எல்லாம் பயன்பெறுகிற

வகையிலே, பச்சிளம் குழந்தை தீவிர சிகிச்சை மையத்தை எங்களுடைய பகுதிக்குத் தந்ததற்காக என் மனமார்ந்த நன்றியை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜப்பானியர்கள்தான் உலகத்திலே அதிகப்படியான சராசரி வாழ்வைப் பெற்றிருக்கிறார்கள் என்று புள்ளிவிவரம் சொல்கிறது. இந்தியாவிலே கடைக்கோடி தமிழகம் ஜப்பானையும் மிஞ்சுகிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களுடைய வாழ்நாள் 80-ஐ எட்டும், 90-ஐ விஞ்சும் என்று இந்த வாழ்நாளை, தமிழர் சமூகம் பெறுகிற வகையிலே, வருங்கால தலைமுறை பெறுகிற வகையிலே இன்றைக்கு இந்த நலத் திட்டங்களை அறிவித்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒவ்வொரு தமிழனும், கடைசி தமிழன் வாழ்கிற வரை நன்றிக் கடன் பட்டவன் என்று வாழ்த்தி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

முற்பகல் 11-50

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதியின் வடிவமாய், நீதிக்கே பெருமை சேர்த்து, அன்னை தாய்த் தமிழ்நாட்டின் நீதி தேவதையாய், மீண்டும் 5-வது முறையாக முதல்வர் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வாழ்த்தி, வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சூழ்ச்சி என்னும் சுடுதனலில் எதிரிகள் தள்ளியபோதும், சதி செய்த சகுனிகள் சாம்பலில் தள்ளியபோதும், பீனிக்ஸ் பறவையாய் அரசியல் வானில் உயரப் பறந்து, தந்திரச் சிறுநரிகளின் ஓலத்தைப் புறந்தள்ளி, ஆர்.கே. நகர் சட்டமன்ற இடைத்தேர்தலில் இதுவரை இந்திய அரசியல் தேர்தல் வரலாற்றில் (மேசையைத் தட்டும் ஒலி) வேறெவரும் பெற்றிட முடியாத வரலாற்றுச் சாதனையை, வாக்காளப் பெருமக்களினுடைய பேராதரவைப் பெற்று நாட்டு மக்களின் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) வந்த முதல் நாளான இன்றே, நோயைத் தீர்ப்பதற்கு தாய்த் தமிழ்நாட்டில், நோயில்லாத தமிழ்ச் சமூகத்தை உருவாக்குவதற்கு இன்று விதி 110-ன்கீழ் அவர்கள் அள்ளித் தந்த திட்டங்கள் இதுவரை சுகாதாரத் துறையில் இந்திய வரலாற்றில் வேறு எந்த அரசும் அறிவித்திட முடியாத முன்மாதிரி திட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும்

ஒலி) ஏற்கெனவே 2011–லே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது முதலமைச்சரினுடைய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், எத்தனை வகையான நோய்கள் இருக்கின்றனவோ, அத்தனைவகை நோய்களுக்கான சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்காக பல்லாயிரம் கோடி ரூபாயினை அள்ளித் தந்து, மக்கள் நோய் நீங்கி ஆரோக்கியமாக வாழ்வதற்கு வழி கண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் படுக்கை வசதிகளை விரிவாக்கம் செய்தது, 12 புதிய இரத்த வங்கிகள், இரத்த சேவை மையங்கள் 700–க்கும் மேற்பட்ட மருத்துவப் படிப்பு இடங்கள் உள்ளிட்டவைகளுக்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதுபோன்று சாதாரணமாக இன்றைக்கு மருத்துவப் படிப்புகள் எவ்வளவு மதிப்புள்ளவை என்று தெரியும். சுதந்திரம் பெற்ற இந்தியாவிலேயே ஒரே ஆண்டில் தமிழ்நாட்டில் கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய ஏழையெளிய குழந்தைகளில் 700 மருத்துவர்களை உருவாக்குவதற்கு இடங்களைத் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல் புதுக்கோட்டையில் புதிய அரசு மருத்துவமனைக் கல்லூரியும், தென்தமிழ்நாட்டில் புதிய அரசு பல் மருத்துவமனையும் அமைக்க ஆணையிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் சுகாதாரத் துறையில் இதுவரை வரலாறு காணாத சாதனைத் திட்டங்களை இன்று விதி 110–ன்கீழ் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே காலணி முதல் மடிக்கணினி வரை வழங்கி கல்வித் துறையிலே வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைகளைப் படைத்தவர்கள், இப்போது கர்ப்பகாலத்திலிருந்து கல்லறை வரை சுகாதாரத் துறைக்கு எண்ணற்ற திட்டங்களைத் தந்துள்ளார்கள். பசித்த உணவிற்கு 20 கிலோ அரிசியும், சமைத்த உணவாய் ஒரு ரூபாய் இட்டிலியும் தந்து உலகத்திலேயே மக்கள் மகிழ்ந்து துன்பம், துயரம், கண்ணீர் இல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) மனிதன் அமைதியாக, ஆரோக்கியமாக முழுமையான தன்னுடைய வாழ்வை இந்தப் பூமிப் பந்திலே வாழ்வதற்கு ஏற்ற ஒரே பூமி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆள்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) என் தாய்த் தமிழ்நாடுதான் என்ற மெத்த பெருமையோடு இன்று அறிவித்திருக்கின்ற இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்புகளைப் பாராட்டி, வாழ்த்தி,

வணங்கி வாய்ப்புக்கு நன்றி பாராட்டி நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை ஆர்.கே. நகர் தொகுதியில் "மக்களால் நான்" என்பதை நிரூபிக்கின்ற வகையிலே 1½ இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் மாபெரும் வெற்றியைப் பெற்று ஐந்தாவது முறையாகத் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்று (மேசையைத் தட்டும் ஒலி) தற்பொழுது "மக்களுக்காக நான்" என்று மக்கள் நல்வாழ்வுத் துறை தொடர்பாக 22 திட்டங்களை அறிவித்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு என்பதை நான் இங்கு பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது, சுகாதாரமாக நல்ல முறையில், சிறந்த முறையில் வாழ வேண்டும் என்பதற்காக 22 திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று அறிவித்திருக்கிறார்கள். 10 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதி கொண்டதாகத் தரம் உயர்த்துதல் உள்ளிட்ட 22 திட்டங்கள். அதுமட்டுமல்ல, இதிலே முக்கியமாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால், கர்ப்பிணித் தாய்மார்கள் சுகாதாரத்தோடு குழந்தை பெறவேண்டும் என்பதற்காக 'அம்மா மகப்பேறு சஞ்சீவி' என்ற திட்டத்திற்கு ரூ.10 கோடி ஒதுக்கிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி, தென் தமிழகத்தில் ஒரு பல் மருத்துவக் கல்லூரி, கடந்த 4 ஆண்டுகளில் 710 மாணவர்கள் மருத்துவப் பட்டப்படிப்பு படிப்பதற்கு புதிய இடங்கள் ஒதுக்கித் தந்தது, புதிய ஆம்புலன்ஸ், 50 பழைய ஆம்புலன்ஸ்களை மாற்ற ரூ.5 கோடி ஒதுக்கியது போன்ற பல திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். உண்மையிலேயே மக்களுக்குப் பயன்படுகின்ற இந்தத் திட்டத்தினைக் கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி சார்பாக மனதார வாழ்த்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.கே. நகர் தொகுதியில் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் இந்தியாவிலேயே யாரும் அடையாத வெற்றியைப் பெற்று, நாட்டில் இன்றைக்கு கின்னஸ் சாதனை படைத்திருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கட்சியின் தலைவர் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைக் கூறிக் கொள்கிறேன். இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் மருத்துவத் துறை தொடர்பாக பல நலத் திட்டங்களை இங்கே அறிவித்திருக்கிறார்கள். வெளியூர்களுக்குச் செல்லும்போது பேருந்து நிலையத்தில் இருக்கின்ற தாய்மார்கள் அவர்களின் குழந்தைகளுக்குப் பாலூட்ட முடியாத நிலையில் இருந்தார்கள். தமிழகத்தில் இருக்கக்கூடிய பெரிய பேருந்து நிலையங்களில் சமீபத்தில் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்கான அறைகள் அமைக்கின்ற ஒரு பெரிய திட்டத்தினை அறிவித்து, இன்றையதினம் தாய்மார்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். அதுபோல், இரத்த வங்கி, இரத்த சேமிப்பு நிலையம், புதிய மருத்துவக் கல்லூரிகள், புதிய மாணவர்கள் சேர்ப்பு, அதுமட்டுமல்லாமல், செவிலியர்கள் தங்குவதற்காகப் புதிய விடுதி கட்டுதல், டெங்கு காய்ச்சல், சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்காக ராஜபாளையத்தில் ஒரு நவீன படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை அமைத்தல், அடையாறில் இருக்கின்ற புற்று நோய் மருத்துவமனையை ஒப்புயர்வு மையமாக மாற்றுதல் குறித்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள்கூட புற்று நோயினாலே இறந்ததாகத்தான் எல்லோரும் சொல்வார்கள். ஒரு மனிதனுக்குப் புற்று நோய் வந்துவிட்டாலே எல்லோரும் பயந்துவிடுவார்கள். இனிமேல் புற்று நோய் வந்தால் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. புற்று நோய் என்ற பயமே இல்லாத அளவிற்கு அடையாறிலே உள்ள அந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பழைய ஆம்புலன்ஸ் வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்கள் என்று பல திட்டங்களை அறிவித்திருக்கின்ற மாண்புமிகு அம்மா

அவர்களுக்கு, தெய்வத் தாய்க்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்று அன்னமிட்ட கையாக இருந்த தாய், இன்று நோய் அகற்றி சிறந்த செவிலித் தாயாக, மக்கள் அனைவருக்கும் நோய் தீர்க்கும் சஞ்சீவியாக இருக்கின்றார் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.*

திரு. ஆ. ராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.கே. நகர் தொகுதியில் ஒன்றரை இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழிதான். இன்று தமிழகத்திலே நோயே இல்லாமல் இருக்க மாண்புமிகு அம்மா அவர்கள் பல திட்டங்களை அறிவித்துவிட்டார்கள். அதுமட்டுமல்லாமல், சிறுநீரகம், இரத்தம், சிறப்பு உடல் பரிசோதனை, அம்மா ஆரோக்கிய திட்டம் எனப் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஜப்பான் முதலிடமாக இருக்கிறது என்று முனைவர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் உலகத்திலேயே முதலிடம் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்று இந்த 22 சிறப்புத் திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைக் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. ம. கலை அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுநாள் வரையில் இந்தியாவில் மருத்துவத் துறையில் தமிழ்நாடுதான் முதல் மாநிலம் என்று சொல்ல வைத்தார்கள். ஆனால், இனிவரும் காலங்களில் உலகமே வியந்து*

பாராட்டக்கூடிய மாநிலமாக, (மேசையைத் தட்டும் ஒலி) வளர்ந்த நாடுகளுக்கு இணையாக வைத்தியம் செய்யக்கூடிய நாடு தமிழ்நாடுதான் என்கின்ற பெருமையை, நமது மாநிலம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியால் பெறவிருக்கிறது. Health is wealth என்பார்கள். ஒரு மனிதன் எதை வேண்டுமானாலும் தாங்கிக்கொள்வான். ஆனால், அந்த மனிதன் தன்னுடைய உடம்பிற்கு ஏதாவது நோய் வந்தால் தாங்கிக்கொள்ள முடியாது. ஆனால், தாயாக நானிருக்கிறேன் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சூளுரைத்து அனைத்துப் பரிசோதனைகளும் மருத்துவமனைகளில் செய்யப்படும் திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தமிழ்நாட்டை ஒரு Medical Hub என்று சொல்வார்கள். தனியார் மருத்துவமனைகளைவிட அரசு மருத்துவமனைகளில் மிகச் சிறந்த வசதியுடன் ஏழை நோயாளிகளுக்கு உயர்ந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஒரு குடியரசுத் தலைவருக்கு என்ன சிகிச்சை அளிக்க முடியுமோ, அது கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய சாதாரண ஏழையெளிய மக்களுக்கும் கிடைக்கக்கூடிய சிறந்த முறையை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் நலமோடு வாழவேண்டுமென்று இந்த நேரத்திலே ஆண்டவனை வேண்டுகின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மக்கள் சுகாதார நலம் பெறக்கூடிய நோக்கத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பல்வேறு திட்டங்களை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக நான் வரவேற்கின்றேன். குறிப்பாக, HbA1C என்ற சர்க்கரை நோயைக் கண்டுபிடிக்கக்கூடிய வசதி, 302 அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிலையங்களில் தொடங்கப்படும் என்ற அறிவிப்பை நான் நெஞ்சாரப் பாராட்டுகின்றேன். சர்க்கரை நோய் மிகுதியாக இருக்கக்கூடிய இந்தச் சூழலில் ஏழை மக்களுக்கு இது மிகப்பெரிய அளவிலே பயன்தரும். அதுபோன்று, 31 தாலுகா மருத்துவமனைகள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பையும் நான் வரவேற்கின்றேன். சிறுநீரக மாற்று சிகிச்சை உட்பட, காப்பீட்டு திட்டத்திற்கு மேலும் 25 கோடி ரூபாய் Corpus Fund ஆக வழங்கப்படும் என்ற அறிவிப்பையும் நான் வரவேற்கின்றேன். தென்

தமிழக மக்களுக்காக ஒரு பல் மருத்துவக் கல்லூரி அமைக்கவேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக வைக்கப்பட்டது. தற்போது பல் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அது இராமநாதபுரத்தில் அமைந்தால் நலமாக இருக்கும் என்று சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அத்தனை அறிவிப்புகளையும் வரவேற்று அமர்கின்றேன்.

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரத் துறையிலே ஏழையெளிய மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கக்கூடிய வகையில் பல்வேறு நலத் திட்டங்களை இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்றப் பேரவையிலே அறிவித்திருக்கின்றார்கள். அவற்றை நாங்கள் முழுமையாக வரவேற்கின்றோம். அதேசமயத்தில் நான் ஏற்கெனவே அவர்களுக்குச் செலுத்த வேண்டிய நன்றிக் கடன் பாக்கி இருக்கின்றது. கடந்த கூட்டத் தொடரின்போது மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பட்டுக்கோட்டை ஊராட்சிக்கு பொன் விழா நடத்துவதற்கு நிதி ஒதுக்கவேண்டுமென்று தனிப்பட்ட முறையிலே கோரிக்கை வைத்தேன். அதை ஏற்று ரூ.25 கோடி (குறுக்கீடு) ஒதுக்கியதற்காகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு உரையை முடித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சியின் சார்பாக திரு. ஆ. ராமசாமி அவர்கள் பேசிவிட்டார். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

***திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதவள மேம்பாட்டு குறியீட்டில் அகில இந்திய அளவில் 10–க்கு 5.2 என இருக்கும்போது, தமிழகம் 10–க்கு 6.8 ஆக உயர்ந்திருப்பது பாராட்டத்தக்க விஷயம். விதி 110–ன்கீழ் ரூ.716 கோடியே 22 இலட்சத்திற்கு 22 திட்டங்கள் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நமக்கு முன்னால் இருக்கிற

கேரளாவினை எட்டுவதற்கு, இன்றைக்கு அறிவிக்கப்பட்ட இந்த 22 திட்டங்கள் H.R.D. Index-மனித வள மேம்பாட்டு குறியீட்டில் இந்தியாவிலே தமிழகத்தை முதல் இடத்திற்குக் கொண்டுபோகும் என்ற ஓர் உன்னதமான விஷயத்தைப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, குறிப்பாக தென் மாவட்டங்களில் Dental College, புதுக்கோட்டையில் மருத்துவக் கல்லூரி மற்றும் எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக Amma Master Health Check-up, அம்மா ஆரோக்கியத் திட்டம், அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம் போன்ற இந்த உன்னதத் திட்டங்களைக் கொண்டு வந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு உளமார்ந்த நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வையத்தின் நன்மைக்கே என் வாழ்வு என்று உணர்த்திய வரலாற்றுப் பெட்டகமே! (மேசையைத் தட்டும் ஒலி) வையமும் வானமும் ஒருங்கே வணங்கும் ஞானத் திருவுருவே! மூவுலக அதிசயமே! புண்ணியத்தின் பொக்கிஷமே! தாங்கள் இறைவன் தந்த வரம்; இனி வெற்றியே என்றும் நிரந்தரம். ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு ஆதாரம் சுகாதாரம்தான் என்பதை நன்கு அறிந்தவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். தீர்க்கதரிசனமாய்த் தீட்டும் ஒவ்வொரு திட்டமும் நோயற்ற வாழ்வை மக்களுக்கு வாரி வழங்குவதால், அம்மா தாங்கள்தான் எங்கள் குறைவற்ற செல்வம். “நல்லோர் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை.” ஆம். பல நூறு கோடி ரூபாயில் பார் போற்றும் திட்டங்கள். அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம்–Amma Master Health Check–up, அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம்–Amma Woman Special Master Health Check-up, அம்மா ஆரோக்கியத் திட்டம், அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், புதிய பல் மருத்துவக் கல்லூரி, புற்று நோய் ஒப்புயர்வு மையம் எனத் தங்கள் அன்பெனும் மழையால் தமிழகத்தில் அகன்று ஓடி விட்டது நோய். தாங்கள்தான் ஆரோக்கியம் தந்த தாய்! (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் அன்பெனும் மழையால் தமிழகத்தில் அகன்று ஓடி விட்டது நோய். தாங்கள்தான் ஆரோக்கியம் தந்த தாய்! அம்மா, புதுக்கோட்டை நகரத்திற்கு

மருத்துவக் கல்லூரி எனும் வரம் வழங்கி சிறப்பித்தீர்கள். தாங்கள் வரம் தந்த இக்கோட்டை, தங்களின் நிரந்தரக் கோட்டை. ஆம்! புதுக்கோட்டை தங்களால் ஆனது புகழ் கோட்டை. இந்தத் தலைமுறை மட்டுமல்ல; எந்தத் தலைமுறையும் அம்மா தங்கள் பாதங்களை நன்றியால் நனைத்துக்கொண்டே இருப்போம்; ஒவ்வொரு நொடியும் இந்த நன்றியை நினைத்துக் கொண்டேயும் இருப்போம். தங்கள் பாத மலர்களில் காணிக்கையாக்க, எங்கள் பரம்பரை நன்றியும் போதாது தாயே! தாயின் திருவடிகளில் சரணம் சரணம் எனச் சொல்லி, நன்றி மலர்களை துறையினுடைய சார்பிலே காணிக்கை ஆக்குகின்றேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். ஒரு நிமிடத்தில் நான் படித்துவிடுகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, ஒரு நிமிடம் உட்காருங்கள், நான் படித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) உங்களைப் பேச அனுமதிக்கிறேன், உட்காருங்கள்.

கொல்கத்தாவிலே ஒரு மருத்துவமனையிலே அனைத்து மருத்துவர்களாலும் கைவிடப்பட்ட ஒரு நோயாளியின்மீது, அன்னை தெரசா அவர்களின் கை பட்டவுடன், அவர் குணமடைந்து, மீண்டெழுந்த காரணத்தால், அன்னை தெரசாவிற்கு அன்றையதினம் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது என்பார்கள். அந்தவகையில் மக்களின்மீது நேசம் வைத்து, அவர்தம் நலம் காத்து, வாசம் காத்து, சுவாசம் காத்து, தேசம் ஆள்கிற மாசில்லாத மாசி மகம் நம் அம்மா அவர்களும் புனிதர்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு செவிலியர் குடியிருப்புகள், வாகனங்கள், ஆம்புலன்ஸ்கள், புதுக்கோட்டையில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி, அம்மா மாஸ்டர் ஹெல்த் செக்-அப், அம்மா ஆரோக்கியத் திட்டம், அம்மா மகப்பேறு சஞ்சீவி என சுகாதாரத் துறையில் புரட்சிகரமான அறிவிப்புகளை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அரசு மருத்துவமனைகளெல்லாம் பாிசு மருத்துவமனைகளாக மாறியுள்ளன. சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)